செ.வெ.எண்: 68 நாள்:29.10.2021

**நாகப்பட்டினம் மாவட்டத்தை பிளாஸ்டிக் இல்லா மாவட்டமாக உருவாக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

பிளாஸ்டிக் மாசினால் ஏற்படும் அபாயகரமான விளைவுகளை கருத்தில் கொண்டு தூக்கி எறியும் மக்காத பிளாஸ்டிக் பொருட்களான பிளாஸ்டிக் தாள்கள், பிளாஸ்டிக் தட்டுகள், பிளாஸ்டிக் தேனீர் குவளைகள், தண்ணீர் பாக்கெட்டுகள், பிளாஸ்டிக் உறிஞ்சுகுழல்கள், பிளாஸ்டிக் கைப்பைகள் மற்றும் பிளாஸ்டிக் கொடிகள் உற்பத்தி மற்றும் சேமித்து வைத்தல், விநியோகித்தல், விற்பனை செய்தல் போன்றவை 01.01.2019 முதல் முற்றிலுமாக தமிழ்நாட்டில் தடை செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறிய பிளாஸ்டிக் பொருட்கள் உபயோகத்தினால் உயிரினங்களுக்கு மரபணு பாதிப்புகளை ஏற்படுத்துதல், நீர்நிலைகளை மாசுபடுத்துதல், மற்றும் நிலங்களை ஆக்கிரமித்து மழைநீர் நிலத்தடியில் ஊடுருவுவதையும் தடுக்கிறது. மேலும், இவை கடல்வாழ் உயிரினங்களுக்கு புதிய உணவு பொருளாக மாறி கடல்வாழ் உயிரினங்களின் சூழலியலை மாற்றியமைக்கிறது.

தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள்:

பிளாஸ்டிக் பேப்பர்கள், மேசைவிரிப்புகள், பிளாஸ்டிக் தட்டுகள், பிளாஸ்டிக் தடவப்பட்ட டம்ளர், பிளாஸ்டிக் டீ டம்ளர், பிளாஸ்டிக் உறிஞ்சு குழல்கள், பிளாஸ்டிக் கைப்பைகள், பிளாஸ்டிக் தடவப்பட்ட கைப்பைகள், பிளாஸ்டிக் கொடிகள், உணவுப் பொருட்களை கட்ட உபயோகப்படுத்தப்படும் பிளாஸ்டிக் உறைகள் மற்றும் பிளாஸ்டிக் தண்ணீர் பாக்கெட்டுகள்.

வாழையிலை, தாமரை இலை, பாக்குமர இலையிலான தட்டுகள், அலுமினிய தாளினாலான பைகள், காகித உறிஞ்சுக்குழல், கண்ணாடி, உலோகத்தால் ஆன குவளைகள், துணி, காகிதம், சணல் பைகள், காகித துணிகொடிகள், பீங்கான் பாத்திரங்கள், மண் கரண்டிகள் மற்றும் மண் குவளைகள்.

மேற்கூறிய பிளாஸ்டிக் பொருட்களுக்கான மாற்று பொருட்களை பயன்படுத்த வேண்டும் எனவும், ஒரு முறை மட்டும் உபயோகப்படுத்தி தூக்கி எறியக்கூடிய பிளாஸ்டிக் பொருட்களை தொழிற்சாலைகள் உற்பத்தி செய்தாலோ, வணிக நிறுவனங்கள், கடைகள் விற்பனை செய்தாலோ மற்றும் பொதுமக்கள் பயன்படுத்தினாலோ கடும் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், 01.01.2021 முதல் பிளாஸ்டிக் இல்லா நாகையை உருவாக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**